சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 14.12.2018

அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 28–ம் நாள் (டிசம்பர் திங்கள் 14–ம் நாள்:–14.12.2018) வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.01**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018–19–ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுஙகல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34ற்கான விவாதத்தின் போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுஙகல், சிறப்பு திட்டஙகள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு எண்.14–ல் "மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழுஙக தானியஙகும் குடிநீர் மையஙகள் (Automatic Vending Machine) நிறுவப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன் பேரில் சின்னமனூர் நகராட்சியில் உள்ள 27 வார்டுகளில் 27 தானியஙகும் குடிநீர் மையஙகள் தனியார் தொழில் நிறுவனஙகளுடன் / தொழில் முனைவோர்களுடன் இணைந்து **Corporate Social Responsibility Fund (CSR FUND)** சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று செயல்படுத்த **05.12.2018** ம் ஆம் நாள் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| S.No. | Description | Rate Quoated By Dharana Infrastructure Projects Pvt Ltd,Chennai. | | |
|---|---|---|---|---|
| | | Rate to be remitted to the Municipality (Rupees per 20 Ltr.) | Rate to be charged for sale to public (Rupees per 20 Ltr.) | Rate be charged for sale to public (Rupees per 1 Ltr from chilling machine) |
| 1 | Establishment of 1000 Ltr./Hr. capacity community drinking water system through Reverse Osmosis with UV treatment in all 27 Wards in 27 Places in Chinnamanur Municipality under PPP mode. | 1.00 | 6.90 | 1.00 |
| | TOTAL | | | |

**அலுவலகக் குறிப்பு:–** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் Dharana Infrastructure Projects Pvt Ltd,Chennai, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அஙகீகரிக்கலாம். (ந.க.எண்.3925/2018/இ1).

**தீர்மான எண், நாள்** **539, நாள்.14.12.2018**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.02**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தண்ணீர் தொட்டி மற்றும் பம்பிங் மெயின் வால்வுகள் தேய்மானம் அடைந்து பழுது ஏற்பட்டுள்ளதால், குடிநீர் பணியின் அவசர அவசியம் இப்பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.300000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **540, நாள்.14.12.2018**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.03**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் எண்.TN60V8239 டிப்பர் லாரிக்கு தகுதி சான்று பெரும் பொருட்டு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள **03.12.2018** ஆம் நாள் கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. நேஷனல் பாடிபில்டிங் லேபர் ஒர்க்ஸ், சின்னமனூர் – ரூ.**164510/–**
2. சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், சின்னமனூர் – ரூ.**166600/–**

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.**<br>**3. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6658/2018/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **541, நாள்.14.12.2018** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.04**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக Non Mosquioto house Smily Door Sticker –**1300** எண்ணம் மற்றும் Dengue Mosquito 52 Week Calender Door Sticker –**1300** எண்ணம் தமிழ்நாடு மல்டிபர்போஸ் இன்டிகோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்தின் அச்சிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.**130390/–**ஐ மேற்கண்ட நிறுவனம் கேட்டுக் கொண்டதற்கிணங்க செலவினத் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட செலவினத்தை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட IEC நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **542, நாள்.14.12.2018** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.05**

சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் IHHL திட்டத்தின் கீழ் கழிப்பிட கட்டும் பணியினை விரைந்து முடிக்க வேண்டும் என உயர் அதிகாரிகளின் தொடர் அறிவுறுத்தலுக்கிணங்க மேற்கண்ட பணியில் **50** பின் தங்கிய பயனாளிகளுக்கு கழிப்பிடம் கட்ட உதவியாக CSR நிதியிலிருந்து பேசன், PVC பைப்கள் மற்றும் கதவுகள் போன்றவற்றை வாங்கும் பணிக்கு **05.12.2018**ஆம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**1. V.K.R.டிம்பர்ஸ் மற்றும் ஹார்டுவேர்ஸ்**

1. WC கோப்பை செட் 1 எண்ணம் – ரூ.**670/–**
2. PVC லெட்டின் கதவு 1 எண்ணம் – ரூ.**1470/–**
3. 4” PVC பைப் 1 மீட்டர் – ரூ.**230/–**
4. 5” PVC பைப் – ரூ.**300/–**

**<u>2. ஸ்ரீ ஆறுமுகம் டிரேடர்ஸ், சின்னமனூர்.</u>**

1.லெட்டின் கோப்பை 1 எண்ணம் – ரூ.700/–
2.PVC கதவு 1 எண்ணம் – ரூ.1510/–
3. 4" PVC பைப் 1 மீட்டர் – ரூ.235/–
4.5" PVC பைப் 1 மீட்டர் – ரூ.305/–

**<u>3. இமயம் பிளைவுட்ஸ், சின்னமனூர்.</u>**

1. WC வாட்டர் குளோஸ்செட் செட் 1 எண்ணம் – ரூ.675/–
2.PVC லெட்டின் கதவு 1 எண்ணம் – ரூ.1475/–
3.4" PVC பைப் 1 மீட்டர் – ரூ.230/–
4.5" PVC பைப் – ரூ.301/–

அலுவலகக் குறிப்பு:– **1. மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட செலவினத்தை CSR நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**
**2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த V.K.R டிம்பர்ஸ் சின்னமனூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**
**3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1238/CSR/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **543, நாள்.14.12.2018**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.06

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME3) துறை, நாள்.30.04.1997–இன்படி 164 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது 65 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மற்றும் 50 தற்காலிக பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் 49 துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் (ந.க.எண்.K.Dis.No.28369/ஜே3/2018, நாள்.22.11.2018) 49 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி 49 பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தினால் ஏற்படும் செலவினம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நபர் ஒன்றுக்கு 2018–2019ம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவித்த தினக்கூலி –ரூ.330x365x49 | – | 5902050 |
| 2. | தொழிலாளர் சேமநலநிதி 13.5% | – | 796776 |
| 3. | காப்பீடு 49x50x12 | – | 29400 |
| 4. | சீருடை | – | 49000 |
| 5. | நிர்வாக செலவு 5% | – | 295102 |
| | | | 7072328 |

அலுவலகக் குறிப்பு:– **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை எதிர்வரும் அரசின் நிதி அல்லது நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.4998/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **544, நாள்.14.12.2018**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.07

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் மானியக் கோரிக்கை எண்.34, 2018–2019 அறிவிப்பு எண்.14ன்படி, உயர்தரமான குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் அமைக்க மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியமைக்கு தொகை ரூ.57383/– M/s Accord Advertising Agencies, Chennai அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3925/2018/இ1).**

**தீர்மான எண், நாள்** **545, நாள்.14.12.2018**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.08

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர் கசிவு மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் ஏற்படும் பழுது நீக்கம், தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தண்ணீர் தொட்டிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணி மற்றும் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் காவல் பணிகள் மேற்கொள்ள ஜனவரி 2019 முதல் ஜீன் 2019 வரை உள்ள காலங்களுக்கு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.** அனுமதிக்கலாம்.
**2.** மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண், நாள்** **546, நாள்.14.12.2018**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.09

இந்நகராட்சிச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்கு உயர்மின் கோபுர விளக்கு அமைக்கும் பணிக்கு ரூ.7.20 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 06.12.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 0.60% மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர்–0.68% மதிப்பீட்டைவிட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.60%) திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.5646/2018/இ1).

**தீர்மான எண், நாள்** **547, நாள்.14.12.2018**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.10**

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 10.12.2018 ஆம் நாளிட்ட ந.க.எண்.31260/22018/இ1 கடிதத்தின்படி, சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் சாலைகள், சிறு பாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணிக்கு கீழ்க்கண்ட விவரப்படி ரூ.335.00 இலட்சம் தேவைப்படுகிறது.

| வ. எண். | அடிப்படை வசதிகள் விவரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 1 முதல் 27 வார்டுகளில் சாலைகள் அமைத்தல் | ரூ.240.00 |
| 2. | 1 முதல் 27 வார்டுகளில் சிறு பாலங்கள் அமைத்தல் | ரூ.10.00 |
| 3. | 1 முதல் 27 வார்டுகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் | ரூ.85.00 |
| | மொத்தம் | **ரூ.335.00** |

மேலும், மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மேற்கொள்ள நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. மாநில நிதிக்குழு மான்யத்தின் கீழ் மாதந்தோறும் விடுவிக்கப்பட்டு வரும் மான்யத்தில் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நகர்ப்பகுதியில் சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டிற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் பராமரிக்கப்படும் அடிப்படை வசதிகள் இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் முழு மான்யம் அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் பராமரிக்கப்படும் அடிப்படை வசதிகள் இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் 2018–2019ம் நிதியாண்டிற்கு முழுமான்யமாக ரூ.335.00 இலட்சம் வழங்க வேண்டி கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.2380–1/2018/இ1)**

**தீர்மான எண், நாள்** **548, நாள்.14.12.2018**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******